ரம்பேவ பிரதேச சபை - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரம்பேவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ரம்பேவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3.7 இன் பிரகாரம் நிறுவனமொன்று தயாரித்த பாதீட்டு ஆவணங்களில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் அந்த காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் இன்றி சமர்ப்பிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3.7 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றில் கடன்கொடுத்தோர் மீதியில் உள்ள ரூபா 1,730,000 செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாதிருக்கும் போதும் கடன் கொடுத்தோர் மீதியாக இனங்காணப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளில் கடன்கொடுத்தோர் மீதியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | வேலை ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்களின் பெறுமதி கடன் கொடுத்தோராக இனங்காண முடியாது. |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் கடன்கொடுத்தோரில் குறைவு/ அதிகரிப்பு மற்றும் ஏனைய நடைமுறைப் பொறுப்புக்களில் குறைவு, அதிகரிப்பின் கீழ் ரூபா 27,136,744 பெறுமதியொன்று காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டிற்குரிய மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுக்கள் ஒப்பீடு செய்யும் போது அவ்வாறான பெறுமதியொன்று இனங்காண முடியாதிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். | சரியான நிதி அளவினை இனங்கண்டு அதன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | பெரேட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 1,065,559 பெறுமதியுடன் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அந்த சொத்துக்கள் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைத்த காசுப்பாய்ச்சலின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தலாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 15 கணக்கு விடயங்களுக்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் பட்டோலைகளில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளுக்கும் இடையே ரூபா 583,134 வேறுபாடு காணப்பட்டது. | மீதியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாட்டிற்கான காரணத்தை கண்டறிந்து மீதியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,782,068 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | தகவல்களை கண்டறிந்து பொதுச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டோலைகளை நாளதுவரையாக்கி மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 177 ஆம் பிரிவு | சபையில் சேவையாற்றுகின்ற தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களின் சேவையை முடிவுறுத்தும் போது அவர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவிற்கான முன்மொழிவுத் திட்டமொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க சேவைகள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது. | உரிய சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சபைக்குச் சொந்தமான செயற்படு நிலையில் 07 வாகனங்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தற்போது ஓட்டத்தில் ஈடுபடுத்துகின்ற வாகனங்களுக்கு மாத்திரம் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. கனரக வாகனங்கள் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்வதற்குரிய அளவில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப் பட்டிருக்கவில்லை. | அரச நிர்வாக சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 25,728,099 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 14,817,273 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும் | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,169,384 தொகையான நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரம் கிடைத்தவுடன் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவித்து ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) வாடகை | | |
| (i) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் சொத்துக்களை வாடகைக்கு வழங்கியதற்காக கிடைக்க வேண்டிய ரூபா 262,270 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேலும் அறவிடுவதற்குள்ள பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சொத்துக்களை வாடகைக்கு வழங்கியதால் கிடைக்க வேண்டிய சகல நிலுவை பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வருடாந்தம் வாடகைக்கு வழங்கப்படுகின்ற 04 சொத்துக்களை வாடகைக்கு வழங்கியதற்காக 2021 ஆம் ஆண்டிற்கு அறவிட வேண்டிய ரூபா 664,484 தொகையும், முன்னைய ஆண்டுக்காக அறவிட வேண்டிய ரூபா 1,151,033 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சொத்துக்களை வாடகைக்கு வழங்கியதற்காக அறவிட வேண்டிய நிலுவைப் பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) அனுமதிப்பத்திரக் கட்டணம் | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 188,000 இனை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணத்தை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவைப் பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்றாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான கெப் வண்டியொன்று 2019 மே 16 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் சாரதியிடமிருந்து ரூபா 1,107,300 அறவிடுமாறு அந்த தொகையில் 50 சதவீதத்தை விரைவாகவும் மற்றும் மிகுதி ரூபா 92,276 வீதம் 06 தவணைகளில் அறவிடுமாறும் வடமத்திய மாகாண சபையின் பிரதம செயலாளரால் 2020 மே 22 ஆந் திகதிய கடிதத்தில் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 20 ஆந் திகதி வரையிலும் அந்த தொகையில் ரூபா 350,000 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இந்த வாகனத்தை பழுதுபார்க்காமல் தனியார் கராஜ் ஒன்றில் 2½ வருட அளவிலான காலம் முதல் துருப்பிடிக்கும் நிலையில் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | வாகனத்தை பழுதுபார்த்து மீண்டும் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைக்குரிய பழைய நூலக கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் குறித்துரைத்த பிரகாரம் நிறைவேற்றப்படாதிருந்தமை அறிக்கையிடப்பட்டிருக்கும் போது அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் எந்தவொரு பரிசோதனையும் இன்றி 2020 ஒக்தோபர் 12 ஆந் திகதி நிறுத்தி வைக்கப்பட்ட பணம் ரூபா 324,149 இனை விடுவிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டின் போது 03 செயற்திட்டங்களுக்காக மத்திய அரசாங்கத்திடமிருந்து ரூபா 1,730,000 கிடைத்திருந்த போதும் மீளாய்வாண்டின் போதும் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | உரிய செயற்திட்டங்களை விரைவாக அமுல்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறான தகவல்களை கண்டறிய முடியாதுள்ள செலுத்த வேண்டிய ரூபா 1,670,740 தொகையான 10 பழைய மீதிகள் காணப்பட்ட போதும் அந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | இந்த மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2017 ஆம் ஆண்டின் போது சபைக்கு வழங்கப்பட்ட 05 வாகனங்களின் உரித்து சபையின் பெயரில் பெற்றுக்கொள்வதற்கு 2021 ஆம் ஆண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை விரைவாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |